# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச; - 2018

| தரம் :- 12 (2019) | Term Examination, March - 2018<br>பொதுத் தகவல் தொழில்நுட்பம் | நேரம் - மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

1. தசம எண் 72 இன் துவிதச் சமவலு
   1) 1010000  2) 110000  3) 1001000  4) 1000100

2. துவித எண் 1011011 இற்குச் சமவலுவான பதின்ம எண் யாது?
   1) 91  2) 81  3) 71  4) 90

3. சுமியின் வயது $10110_2$, அவளுடைய இளைய சகோதரனின் வயது சுமியின் வயதின் அரைமடங்காகும். சுமியின் இளைய சகோதரனின் வயது பதின்ம எண் வடிவில் …………
   1) 22  2) 10  3) 11  4) 20

4. ASCII குறிமுறைமையில் ஒரு வரியுரு (character) வினைப் பிரதிநிதித்துவம் செய்யத் தேவையான இழிவு பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?
   1) 7  2) 4  3) 8  4) 16

agaram.lk

5. பின்வரும் மெய்நிலை அட்டவணையை ஒத்த தருக்கச் செய்பணியைத் (logical operation) தெரிவு செய்க.

| உள்ளீடு A | உள்ளீடு B | வருவிளைவு |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 0 |

   1) A OR B
   2) NOT (A) AND B
   3) NOT (A) OR NOT (B)
   4) A AND NOT (B)

6. தரப்பட்ட பூலியன் தொடர்பு F= A OR NOT(A) இனை பின்வரும் எவ்வட்டசணை மெய்யுறுத்தப்படுகின்றது?

1)

| A | NOT(A) | F |
|---|---|---|
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |

2)

| A | NOT(A) | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

3)

| A | NOT(A) | F |
|---|---|---|
| 0 | 1 | 1 |
| 1 | 0 | 1 |

4)

| A | NOT(A) | F |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 1 | 1 | 0 |

7. பின்வருவனவற்றுள் எது ஒரு கணிணி மென்பொருள் அன்று?
   1) சொல்முறை வழிப்படுத்தல் (Word Processing)
   2) தரவுத்தளம் (Database)
   3) பட்டைக்புறிமுறை வாசிப்பான் (Barcode Reader)
   4) உபுன்து (Ubuntu)

8. பின்வருவனவற்றுள் எது காந்தவியல் சேமிப்புச் சானமாகும்?
   1) CD
   2) GS Nw வட்டு(Blu Ray Disc)
   3) DVD
   4) வன்வட்டு

9. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A – வன்பொருளை முகாமித்தல்.
   B – ஒரு பயனர் இடைமுகத்தை வழங்குதல்
   C – விரிதாளையும் சொல்முறைவழிப்படுத்தல் வசதிகளையும் வழங்குதல்.
   மேற்குறித்தவற்றில் எது / எவை பணிச்செயல் முறைமையின் அடிப்படைச் சேவைகளாகும்?
   1) A. B மாத்திரம்
   2) A. C மாத்திரம்
   3) B, C மாத்திரம்
   4) A. B, C எல்லாம்

10. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
    A – ஒரு கணினியின் பதிவகம் ஒரு வன்வட்டிலும் பார்க்க பெரிய கொள்திறனை உடையது.
    B – ஒரு கணினியின் பதிவகம் ஒரு வன்வட்டிலும் பார்க்க சிறிய கொள்திறனை உடையது
    C – ஒரு கணினியின் பதிவகத்தின் தரவு அணுகல் கதியிலும் (access speed) பார்க்க வன்வட்டின் தரவு அணுகல் கதி மெதுவானது.
    மேற்குறித்தவற்றில் எது / எவை உண்மையானவை?
    1) A. B மாத்திரம்
    2) A. C மாத்திரம்
    3) B, C மாத்திரம்
    4) A. B, C எல்லாம்

agaram.lk

11. ஒரு கணினியின் செய்பணிகள் (operations) பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
    1) கணினி நிற்பாட்டப்படும்பாது(turned off) முதன்மை நினைவகம் (main memory) அதன் தரவுகளை இழக்கின்றது.
    2) கணினி நிற்பாட்டப்படும்பாது வன்வட்டு அதில் ஏற்கனவே தேக்கி வைக்கப்பட்ட அதன் தரவுகளை வைத்திருக்கின்றது.
    3) கணினி நிற்பாட்டப்படும்பாது வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM) அதில் ஏற்கனவே தேக்கி வைக்கப்பட்ட அதன் தரவுகளை வைத்திருக்கின்றது.
    4) கணினி நிற்பாட்டப்படும்பாது முதன்மை நினைவகம் அதன் தரவுகளை வைத்திருக்கின்றது.

12. பின்வரும் எத்துறை (port) ஓர் இலக்கமுறைக் கமராவினால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை கணினிக்கு நகல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும்?
    1) PS/2;
    2) VGA
    3) USB
    4) RJ 45

13. பின்வரும் செய்பணிகளைக் கருதுக.
    A – மீளப் பெயரிடல் (rename)
    B – நகல் செய்தலும் நகர்த்துதலும் (copy and paste)
    C – அழித்தல்
    மேற்குறித்தவற்றில் எது /எவை ஏற்கனவேயுள்ள கோவைகளையும் கோப்புறைகளையும் செய்யக் கூடிய வலிதான செய்பணிகளாகும்?
    1) A மாத்திரம்
    2) A. B மாத்திரம்
    3) B மாத்திரம்
    4) A. B, C எல்லாம்

14. பின்வருவனவற்றுள் எது பணிச்செயல்முறைமை ஒன்றின் பயன்பாட்டு மென்பொருள் அன்று?
   1) வட்டு பரீட்சிப்பான் (Disk Check)
   2) வட்டு ஒருங்கிணைப்பு (Disk Defragmentation)
   3) பயனர் கணக்கு (User Accounts)
   4) வட்டுத் தூய்மையாக்கல் (Disk Cleanup)

15. பின்வருவனவற்றுள் எது கட்டளைக் கோட்டுப் பணிச்செயல் முறைமையாகும்?
   1) Mac.  2) Isuru Linux  3) DOS  4) Windows.

16. கோவைகளைக் காப்பெடுப்பதற்கு பொருத்தமற்ற சாதனம் பின்வருவனவற்றுள் எது?
   1) இறுவட்டு
   2) தற்போக்கு பெறுவழி நினைவகம் (Random Access Memory)
   3) காந்த நாடா (Magnetic tape)
   4) புற லன்வட்டு (External Hard disk)

17. ஒரு வலக்கைப் பயனரினால் ஓர் கோப்பினைத் திறப்பதற்காக நிறைவேற்றப்பட்ட கொள்பணிகள் பற்றிய கூற்றுக்களுள் சரியானது பின்வருவனவற்றுள் எது?
   1) சுட்டிக் காட்டியைப் (mouse pointer) கோப்பின் மீது வைத்துச் சுட்டியின் வலது பொத்தானை ஒரு தடைவை சொடக்குதல்
   2) சுட்டிக் காட்டியைப் கோப்பின் மீது வைத்துச் சுட்டியின் வலது பொத்தானை இரு தடைவ சொடக்குதல்
   3) சுட்டிக் காட்டியைப் கோப்பின் மீது வைத்துச் சுட்டியின் இடது பொத்தானை இரு தடைவ சொடக்குதல்
   4) சுட்டிக் காட்டியைப் கோப்பின் மீது வைத்துச் சுட்டியின் இடது பொத்தானை ஒரு தடைவ சொடக்குதல்

18. ஒரு கணினியைக் கொள்வனவு செய்யும் போது பின்வரும் கூற்றுக்களில் தொழினுட்ப அம்சமாக எதனைக் கருதலாம்?
   1) நுண்முறைலழியாக்கியின் வேகம்
   2) கணினியின் வர்த்தகப் பெயரின் நன்மதிப்பு
   3) விற்பனையாளரின் நன்மதிப்பு
   4) கணினியின் உத்தரவாதக் காலம்


19. பின்வரும் பிரயோகப் பொதிகளைக் கருதுக.
   A – தரவுத்தளப் பொதிகள்  B- முன்வைப்புப் பொதிகள்
   C- விரிதாள் பொதிகள்  D- சொல்முறை வழிப்படுத்தல் பொதிகள்
   மேலுள்ளவற்றுள் எது.்.எவை தரவுகளைத் தேக்கி வைத்து முறைவழியாக்கப் பயன்படுத்தப்படலாம்?
   1) A, C மட்டும்  2) A, B, C மட்டும்
   3) C மட்டும்  4) A, B, C, D எல்லாம்

20. ஒரு கணினியின் எக்கூறு தரவு தொடர்பான செய்பணிகளைச் செய்கின்றது?
   1) மையமுறைவழி அலகு  2) முதன்மை நினைவக அலகு
   3) உள்ளீட்டு அலகு  4) துணைத் தேக்க அலகு

21. பிரிதிறன் (resolution) 72ppi உடன் 1” x 1” எனும் பருமனுள்ள விம்பத்தில் (image) அடங்கும் படப்புள்ளிகளின் (pixel) எண்ணிக்கை யாது?
   1) 72  2) 144  3) 2592  4) 5184

agaram.lk

22. ஒரு விம்ப பதிப்பு மென்பொருளில் ஒரு விம்பத்தின் ஓர் ஒழுங்கற்ற வடிவமுள்ள பிரதேசத்தை தெரிந்தெடுப்பதற்குப் பின்வரும் கருவிகளில் எது பயன்படும்?

1) 
2) 
3) 
4) 

23. பின்வருவனவற்றுள் எது ஒரு ஒலிக்கோப்பு அன்று?

1) hello.wav 2) sumi.png 3) hai.mp3 4) siththi.flac

24. படமூலமொன்றிலுள்ள பிற்றுக்களின் அளவு (bits per pixel) 2 எனின் பயன்படுத்தப்படும் வர்ணங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

1) 1 2) 2 3) 4 4) 8

25. இலக்கமுறைப் படிமங்கள் (digital images) பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?

1) இலக்கமுறை விம்பங்கள் பிக்சல்களுடன் உருவாக்கப்படுகின்றன.
2) ஒரு விம்பத்தின் பிரிதிறன் (resolution) அதிகரிக்கும்போது அதன் விம்பக் கோப்புப் பருமன் அதிகரிக்கின்றது.
3) ஒரு விம்பத்தின் பிரிதிறனை அங்குலமொன்றிலுள்ள பிக்சல்களின் எண்ணிக்கையினால் அளக்கலாம்.
4) ஒரு விம்பத்தின் பிரிதிறன் (resolution) குறைடையும்போது அதன் விம்பக் கோப்புப் பருமன் அதிகரிக்கின்றது.

26. சொல்முறைவழிப்படுத்தல் திரையின் ruler இல் இல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1) Tab stop box 2) Left Indent 3) Right Indent 4) Center Indent

27. பின்வரும் எந்தக் காட்சியில் பின்னணி நிறம் அல்லது விளைவு (effects) ஒரு ஆவணத்திற்கு பிரயோகித்திருந்தால் காட்சிப்படுத்தாது?

1) Web layout view 2) Print Layout view
3) Reading View 4) Print Preview

28. பக்க ஓர (margin) வகையினுள் அடங்காதது பின்வருவனவற்றுள் எது?

1) Left 2) Right 3) Center 4) Top

29. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் Home Key ஆனது நிலைகாட்டியை ……………… இற்கு நகர்த்துவதற்கு பயன்படுத்தப்படும்.

1) ஆவணத்தின் ஆரம்பத்திற்கு 2) பந்தியின் ஆரம்பத்திற்கு
3) திரையின் ஆரம்பத்திற்கு 4) வரியின் ஆரம்பத்திற்கு

30. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் குறுக்குவழிச் சாவிகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?


1) பாடத்தை/ இலக்குப்பொருளை நகல் செய்லதற்கு Ctrl+C பயன்படுத்தப்படுகின்றது.
2) ஒரு ஆவணத்தின் எல்லாப் பாடங்களையும் / இலக்குப்பொருள்களையும் தெரிவுசெய்வதற்கு Crtl+A பயன்படுத்தப்படுகின்றது.
3) ஏற்கனவே நகல் செய்த பாடத்தையும்/ இலக்குப்பொருளையும் ஒட்டுவதற்கு Ctrl +V பயன்படுத்தப்படுகின்றது.
4) ஒரு ஆவணத்தின் எல்லாப் பாடங்களை மட்டும் தெரிவுசெய்வதற்கு Crtl + A பயன்படுத்தப்படுகின்றது

31. ஒரு விரிதாளின் கலத்தில் சூத்திரம் =2^5+(3-1)*3/4 நுழைக்கப்படுமாயின் அக்கலத்தில் காட்சிப்படுத்தப்படும் எண் யாதாக இருக்கும்?

1) 33 2) 34 3) 13.5 4) 33.5

32. விரிதாள் மென்பொருள் பற்றிப் பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

1) ஒரு நிரையினதும் நிரலினதும் இடைவெட்டு முற்றுறு முகவரி (absolute address) எனப்படும்.
2) நிரல்ப் பெயரினதும் நிரை எண்ணினதும் சேர்மானத்தினால் கலமுகவரி வகை குறிக்கப்படுகின்றது.
3) விரிதாளில் கல உள்ளடக்கம் இடது வரிசையாக்கலில் மாத்திரம் இருக்கலாம்.
4) ஒரு கலத்தின் உள்ளடக்கம் வேறாரு கலத்தைக் குறிப்பிட முடியாது..




33. தரப்பட்டுள்ள உருவில் ஒரு விரிதாளின் பகுதி காணப்படுகின்றது. கலம் A7இல் சார்பு =count(A1:A6) எழுதப்பட்டிருப்பின் கலம் A7 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமானம் யாது?

1) 6 2) 5 3) 30 4) வழுச் செய்தி

34. தரப்பட்டுள்ள உருவில் ஒரு விரிதாளின் பகுதி காணப்படுகின்றது. கலம் A8இல் சார்பு =Average(A1:A6) எழுதப்பட்டிருப்பின் கலம் A8 இல் காட்சிப்படுத்தப்படும் பெறுமானம் யாது?

1) 6 2) 5 3) 30 4) வழுச் செய்தி

35. ஒரு விரிதாளிலுள்ள பின்வரும் கலமுகவரிகளைக் கருதுக.

A – B100 B - $D12 C- $G$23 D- J10$

மேலுள்ளவற்றுள் எது / எவை முற்றுறு கலமுகவரிகளின் சரியான வடிவமாகும்?

1) A, C மட்டும் 2) A, B, C மட்டும்
3) B, C மட்டும் 4) A, B, C, D எல்லாம்

36. ஒரு தொடர்புத் தரவுத்தள அட்டவணையின் (relational database table) முதன்மைச் சாவி தொடர்பானப் பின்வருவனவற்றுள் எது சரியானது?

1) அது தனித்துவமானதக இருக்க வேண்டும்.
2) அது பாடத் (text) தரவுவகையாக இருக்க வேண்டும்.
3) அது வெற்றாக இருக்க வேண்டும்.
4) அது ஒரே மாதிரியான பல பெறுமானங்களைக் கொண்டிருக்க முடியும்.

**37, 38 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் தொழிலாளிகள் பற்றிய தகவல்கள் இடம்பெறும் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக.**

| EmpID | Name | Salary | Grade |
|---|---|---|---|
| DJ/001 | Sumanthira | Rs 32458.12 | SLTS 3 I |
| DK/003 | Kamalasuthan | Rs 45236.11 | SLTS 2 I |
| DM/006 | Priyanka | Rs 50125.33 | SLTS I |

agaram.lk

37. புலம் salary இற்குப் பொருத்தமான தரவு வகை பின்வருவனவற்றுள் எது?

1) Number  2) Text  3) Currency  4) Decimal

38. பின்வருவனவற்றில் எது மேற்குறித்த அட்டவணைக்கு முதன்மைச்சாவியாக மிகவும் உகந்தது?

1) EmpID  2) Name  3) Salary  4) Grade

39. பின்வருவனவற்றுள் எது முன்வைத்தல் மென்பொருளன்று (presentation software)?

1) Libreoffice Impress  2) Openoffice Imptess

3) Libreoffice Calc  4) Ms Powerpoint

40. ஒரு முன்வைப்பு மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல் இலக்குப் பொருள்கள் (objects) உள்ள ஒரு படவில்லை (slide) தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - அசைவூட்ட விளைவுகளைத் (animation effects) தரப்பட்டுள்ள படவில்லையில் உள்ள பல் இலக்குப் பொருட்களுக்கு பிரயோகிக்கலாம்.

B - படவில்லை மாறுகையை (slide transition) படவில்லைக்கு மாத்திரம் பிரயோகிக்கலாம்

C - படவில்லைக் காட்சித் தோற்றத்தின்போது (slide show view) படவில்லை ஒன்றிலிருந்து மற்றையதற்கு மாறும்போது படவில்லை மாறுகை விளைவு தோன்றும்.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை யாவை?

1) A, C மட்டும்  2) A, B, மட்டும்

3) B, C மட்டும்  4) A, B, C எல்லாம்

agaram.lk

## பகுதி II

❖ **நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**1)** a) பின்வரும் பூலியன் கோவைக்கான மெய்நிலை அட்டவணையை எழுதுக.

F=(NOT (A) AND NOT(B)) OR C

b) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக் கூறுக

i. நுணுக்குப்பன்னி (Microphone) சத்தத்தை உள்வாங்கிக் கொள்ள பயன்படுகிறது

ii. வருடியானது (Scanner) பொதிகள், புத்தக உறைகளிலிருந்து தரவுகளை வாசிக்கப் பயன்படுகின்றது.

iii. பளிச்சீட்டு நினைவகமானது (Pen Drive) தரவுகளை chip தயாரிக்கப்பட்டதிலிருந்து நிரந்தரமாக வைத்திருக்கும்

iv. பட்டியானது (Menu) GUI இன் அடிப்படை மூலகமாகும்.

v. ஒரு அறிக்கையில் பெரியளவிலான பாடங்களை (text) உருவாக்குவதற்கும் மாற்றம் செய்வதற்கும் உகந்தது சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளாகும்.

c) ஒரு கணினி முறைமையானது வழமையாக இரு வட்டு செலுத்திகளைக் கொண்டுள்ளது. நெகிழ் வட்டும் வன் வட்டும். வன்வட்டில் சேமித்திருக்கக் கூடிய இரண்டு பிரயோக மென்பொருள்களைத் தருக? (8, 5, 2)

***2)*** a) பணிச்செயல் முறைமையின் பிரதான தொழிற்பாடுகளை எழுதுக?

b) கீழ்வரும் ஒவ்வொரு விடயமும் பணிச்செயல்முறைமையா அல்லது பிரயோக மென்பொருளா என வகைப்படுத்துக

Corel DRAW, Illustrator, Isuru Linux, GIMP, Android

c) பின்வரும் கோவைகளின் நீட்சிகளை எழுதுக?

(i) சொல்முறைவழிப்படுத்தல் கோவைகள்


(ii) வரைபியல்க் கோவைகள;.( Graphic files)

(iii) சலனப்படக் கோவைகள;(Video files.)

(iv) இணையப் பக்கங்கள் (Web pages) (4, 5, 6)

agaram.lk

3) கீழே காட்டப்பட்டுள்ள ஆவணத்தை வாசித்து வினாக்களுக்கு விடைளிக்குக




இவ் ஆவணமானது சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் கிடைக்கும் பொதுவான சில வடிவமைப்புக் கருவிகளைக் கொண்டு வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளிலுள்ள இக்கருவிகள் உரு 2 இல் 1 - 19 வரை முகப்பு அடையாளமிடப்பட்டுள்ளன.

agaram.lk





**Figure 2**

மேலே உரு2 இல் (1 - 19) தரப்பட்ட அடையாளங்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்ட பணிகளைச் செய்வதற்கு தேவையான கருவிகளின் முகப்பு அடையாளத்திற்குரிய எண்களை எழுதுக.

(i) **A** என முகப்பு அடையாளமிடப்பட்டுள்ளவாறு ஆவணத்தின் தலைப்பினை மையப்படுத்துக.

(ii) ஆவணத்தின் தலைப்பின் எழுத்துப் பருமன் 14 இற்கு அதிகரிக்கச் செய்க.

(iii) ஆவணத்தின் தலைப்பை தடிப்பாக்குக. (bold)

(iv) **C** இனால் காட்டப்பட்டுள்ள பாடத்தில் அடிக்கோடிடுக.(Underline)

(v) **C** இனால் காட்டப்பட்டுள்ளதை ஆங்கிலப் பேரேழுத்தாக உருவாக்குக.

(vi) **D** இனால் காட்டப்பட்டுள்ளதை எழுத்துப்பிழை சரிபார்க்குக.

(vii) **D** இனால் காட்டப்பட்டுள்ளதனுடாக கோடிடுக.

(viii) **B** இனால் காட்டப்பட்டுள்ள படத்தை உட்செலுத்துக.

(ix) **F** இனால் காட்டப்பட்டுள்ள மீயிணைப்பை உருவாக்குக.

(x) **E** இனால் காட்டப்பட்டுள்ள பட்டியலை உருவாக்குக (1,1,1,1,2,2,2,2,2,1)

***4)*** *2011 - 2016* ஆம் ஆண்டு வரையான பெரிய வெங்காய உற்பத்தி பற்றிய விபரங்களை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது காட்டுகின்றது. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்குக.

| | A | B | C | D | E | F | G | H |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **Big Onion Production 2011 – 2016** | | | | | | | |
| 2 | **District** | **Unit:Metric Tons** | | | | | | |
| 3 | | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** | **Total** |
| 4 | Anuradhapura | 12,223 | 24,135 | 21,274 | 21,660 | 22,814 | 20,960 | |
| 5 | Polonnaruwa | 332 | 2,449 | 835 | 2,938 | 3,276 | 2,450 | |
| 6 | Matale | 34,573 | 41,992 | 37,382 | 46,137 | 36,040 | 27,608 | |
| 7 | Mahaweli "H" | 9,570 | 10,511 | 10,986 | 28,165 | 16,920 | 12,537 | |
| 8 | **National Total** | | | | | | | |
| 9 | Maximum Production | | | | | | | |
| 10 | Minimum Production | | | | | | | |
| 11 | Total Production in Year | | | | | | | |
| 12 | Source:- http://www.statistics.gov.lk/ | | | | | | | |

agaram.lk

i) அனுராதபுர மாவட்டத்தின் மொத்த உற்பத்தித் தொகையை கணிப்பதற்கு கலம் H4 இல் எழுத தேவையான சார்பை (function) எழுதுக?

ii) ஏனைய மாவட்டங்களின் மொத்த உற்பத்தித் தொகையை கணிப்பதற்கு கல வீச்சு H5:H7 பெற்றுக் கொள்வதற்கான படிமுறையை எழுதுக?

iii) கலம் B10 இல் *2011* ஆம் ஆண்டின் ஆகக் குறைந்த உற்பத்தித் தொகையை காண்பதற்கான சார்பை எழுதுக?

iv) கலம் B9 இல் *2011* ஆம் ஆண்டின் ஆகக் கூடிய உற்பத்தித் தொகையை காண்பதற்கான சார்பை எழுதுக?

v) கலம் B8 இல் *2011* ஆம் ஆண்டு அனைத்து மாவட்டத்திலுள்ள மொத்த உற்பத்தித் தொகையை காண்பதற்கான சார்பை எழுதுக

vi) ஒவ்வொரு ஆண்டுகளுக்கும் இடையிலான உற்பத்தி மாற்றங்களை ஒப்பிட வேண்டியுள்ளதெனக் கொள்க. இந்நோக்கத்திற்கு உகந்த வரைபு வகையைப் பெயரிடுக. (3, 2, 3, 3, 2, 2)

***5)*** கீழே காட்டப்பட்டுள்ள தரவுத்தள அட்டவணையை கருத்திற் கொண்டு வினாக்களிற்கு விடையளிக்குக.

| Students Table | | | |
|---|---|---|---|
| StuID | Name | Class | HouseID |
| A001 | Kamini | 10 | H003 |
| A002 | Sumathra | 8 | H002 |
| A003 | Samantha | 7 | H002 |

| House Table | | |
|---|---|---|
| HouseID | Name | Color |
| H001 | Luxmy | Yellow |
| H002 | Greena | Green |
| H003 | Reedda | Red |

| Event Table | |
|---|---|
| EventID | Name |
| E001 | Long Jump |
| E002 | Race 100m |

| Participate Table | |
|---|---|
| StuID | EventID |
| A001 | E002 |
| A002 | E001 |
| A001 | E001 |

i) முதன்மைச் சாவிகள் மூன்றையும் அவற்றிற்குரிய அட்டவணைகளையும் எழுதுக?

ii) அந்நியச்நசாவிகள் இரண்டையும் அவற்றிற்குரிய அட்டவணைகளையும் எழுதுக?


iii) மாணவன் வயது **(student_age)** எனும் புலத்தைச் சேர்ப்பதற்கு மிக உகந்த அட்டவணை எது?

iv) EventID **E003** மற்றும் Name **Triple Jump** எனும் பதிவைச் சேர்ப்பதற்கு மிக உகந்த தரவுத்தள அட்டவணை எது?

v) StuID **A004** உடைய **fyh(kala)** எனும் **yf;Rkp (Luxmy)** இல்ல *9* ஆம் வகுப்பு (class) மாணவி புதிதாக சேர்ந்துள்ளார். மாணவர் அட்டவணையில் இற்றைப்படுத்தல் நிரைகளை எழுதுக?

vi) பின்வரும் வினவலை நிறைவேற்றும்போது என்ன வருவிளைவு தோன்றும்?
நீளம் பாய்தலில் (Long Jump) பங்குபற்றிய மாணவியின் மாணவர் இலக்கம் (StuID) மற்றும் பெயரைப் (name)பட்டியற்படுத்துக. (3, 2, 2, 2, 3, 3)

6) a) குறித்தவொரு படிமமாக்கல் மென்பொருளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் கருவிப்பட்டையொன்றின் பகுதி கீழே தரப்பட்டுள்ளது. A – D வரை முகப்பு அடையாளமிடப்பட்ட கருவிகளின் பெயர்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் எழுதுக?




b) அறிக்கைப்படுத்தல் மென்பொருளிலுள்ள கீழே காட்டப்பட்டுள்ள சொற்றொடர்களை கருத்திற் கொண்டு வினாக்களிற்கு விடையளிக்குக
(Ctrl+End, Ctrl+Home, Handout master, Slide master, Slide show, outline)

(i) ஒவ்வொரு படவில்லைக்கும் தன்னியக்கமாகவே ஒரு படத்தை ஒரே இடத்தில் உட்செலுத்தப் …………… பயன்படுத்தப்படும்.

(ii) உங்களுடைய முன்வைப்பில் முதலாவது படவில்லைக்கு உங்களை கொண்டு செல்ல …………….. கட்டளை பயன்படுத்தப்படும்.

(iii) ஒரு முன்வைப்பிலுள்ள எல்லா படவில்லைகளிற்கும் ……………………… காட்சியானது படவில்லை மாறுகை விளைவுள்ள போது சிறந்த காட்சியாகப் பயன்படுத்தலாம். (4, 8, 3)

agaram.lk